

விழுப்புரம் வடக்கு மாவட்டம் மேல்மலையனூர் மேற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் அவலூர்பேட்டை ஊராட்சியில் நடைபெற்ற “நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு” சாதனை விளக்க பொதுக் கூட்டத்தில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார். உடன் தலைமைக் கழக பேச்சாளர் டாக்டர் சையத்ஹபிஸ், ஒன்றியச் செயலாளர்கள் நெடுஞ்செழியன், சாந்தி சுப்பிரமணியன், நாராயணமூர்த்தி, துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன், மாவட்டக் கவுன்சிலர் செல்வி ராம சரவணன், அவலூர்பேட்டை நகர நிர்வாகிகள் நடராஜன், அர்ஷத் பேக், ஆர்.எஸ். செல்வம், பாலமுருகன் உள்ளிட்ட நிர்வாகிகள் உள்ளனர்.



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி மாநகராட்சி தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பில் அமைந்துள்ள முத்துமாரியம்மன் திருக்கோவிலில் 1000 பேருக்கு உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் மத்திய மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்துகொண்டு அறுசுவை உணவு வழங்கினார் உடன் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.ஜெ. ரமேஷ், ஆவடி மேயர் ஜி.உதயகுமார், பகுதி கழக செயலாளர் ஜி.ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் எஸ்.ஜெயபாலன், கவுன்சிலர் சத்யா கோ.ரவி, நிர்வாகிகள் விஜயன், ஹரி , ராஜா, வின்சென்ட், பாலா மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் – முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. பங்கேற்பு!

## விழுப்புரம் தெற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டப் பொறுப்பாளர் பொன். கௌதம சிகாமணி அறிவிப்பு!

விழுப்புரம், மே 21-

விழுப்புரம் ( தெற்கு ) மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதம சிகாமணி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

விழுப்புரம் ( தெற்கு ) மாவட்ட தி.மு.க. செயற்குழு கூட்டம் நாளை (22 .05.2025 வியாழக்கிழமை) மாலை 3 மணிக்கு விழுப்புரம் கலைஞர் அறிவாலயத்தில் உள்ள தளபதி அரங்கில் நடைபெற உள்ளது.



மாவட்ட கழக பொறுப்பாளர் டாக்டர் பொன். கௌதமசிகாமணி எனது தலைமையில் நடைபெற உள்ள இக்கூட்டத்தில் மண்டல தேர்தல் பொறுப்பாளர் கடலூர் ( கிழக்கு ) மாவட்ட கழக செயலாளர் வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கழக உயர் நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் திருக்கோவிலூர் சட்டப்பேரவை உறுப்பினர் முனைவர் க.பொன்முடி சிறப்புரையாற்றுகிறார்கள்.

சட்டப்பேரவை உறுப்பினர் அன்னியூர் அ.சிவா , மாவட்ட அவைத் தலைவர் ம.ஜெயச்சந்திரன் , தலைமைக் கழக வழக்கறிஞர் சுவை சுரேஷ் , மாநில மகளிர் அணி பிரச்சாரக் குழு செயலாளர் மோ.தேன்மொழி , மாவட்ட துணை செயலாளர்கள் டி.என்.முருகன் , இரா. கற்பகம் , தலைமைக் கழக தொகுதி பொறுப்பாளர்கள் ஜி.கார்த்திகேயன் , சிவ,ஜெயராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும் இக்கூட்டத்தில் ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் , நிர்வாகிகள் , தலைமை செயற்குழு பொதுக்குழு உறுப்பினர்கள் , சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர்கள் , நகர மன்ற பேரூராட்சி மன்றத் தலைவர்கள் அனைவரும் கலந்துகொள்ள அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்

இவ்வாறு விழுப்புரம் (தெற்கு) மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதம சிகாமணி தெரிவித்துள்ளார்.

### சென்னை மாவட்டத்தில் உள்ள அரசு கலை – அறிவியல் கல்லூரிகளில்

## இளநிலை பட்டப்படிப்பு மாணவர் சேர்க்கை விண்ணப்பிக்க மே 27 கடைசி நாள்!

### மாவட்ட ஆட்சியர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே தகவல்!

சென்னை, மே 21-

சென்னை மாவட்டத்தில், உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 2025-26ஆம் கல்வி ஆண்டிற்கான இளநிலைப் பட்டப்படிப்பு முதலாமாண்டு மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகிறது.

சென்னை மாவட்டத்தில், 2380 இடங்களுடன் மாநிலக் கல்லூரியும், 2038 இடங்களுடன் இராணி மேரி கல்லூரியும், 1410 இடங்களுடன் பாரதி மகளிரி கல்லூரியும், 1086 இடங்களும் டாக்டர் அம்பேத்கர் அரசுக் கலை கல்லூரியும், 1468 இடங்களுடன் காயிதே மில்லத் அரசு மகளிர் கல்லூரியும், 590 இடங்களுடன் ஆர்.கே.நகர், அரசுக் கலை கல்லூரியும், 1430 இடங்களுடன் நந்தனம், அரசுக் கலை கல்லூரியும், 280 இடங்களுடன் ஆலந்தூர், அரசுக் கலை கல்லூரியும் என மொத்தம் 8 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றது. இதில் பல்வேறு பாடப்பிரிவுகள் கற்பிக்கப்பட்டு வருகின்றது.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பயிலும் மாணவர்களுக்குக் கல்விக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. அரசு, அரசு உதவிபெறும் கல்லூரி மாணவ/ மாணவியர்களுக்குப் ‘புதுமைப்பெண்’ மற்றும் ‘தமிழ்ப்புதல்வன்’ திட்டங்கள் மூலமாக ரூ.1000/ வழங்கப்பட்டு வருகிறது. ‘நான் முதல்வன் திட்டம்’ மூலம். வேலைவாய்ப்பிற்கான பயிற்சிகள் நடத்தப்பட்டு வேலைவாய்ப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், அரசால் வழங்கப்படும் கல்வி உதவித் தொகைகள் மற்றும் இலவசப் பேருந்து வசதிகளும் உள்ளன. திறமை வாய்ந்த ஆசிரியர்களால் பாடங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அரசு கல்லூரிகளில் கட்டமைப்பு வசதிகளும் சிறப்பாக உள்ளன.

தமிழ்நாட்டில் உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 2025-26-ஆம் கல்வி ஆண்டிற்கான இளநிலைப் பட்டப்படிப்பு முதலாமாண்டு மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் www.tngasa.in என்ற இணையதள முகவரியில் பதிவு செய்யலாம். 07.05.2025 முதல் இணையதளம் வாயிலாக விண்ணப்பங்கள் பெறப்பட்டு வருகின்றன.

இணையதளம் வாயிலாக விண்ணப்பங்கள் சமர்ப்பிக்க இறுதி நாள் 27.05.2025 ஆகும். தாமாக இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்க இயலாத மாணவர்கள், அனைத்து அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் உள்ள சேர்க்கை உதவி மையங்கள் (Admission Facilitation Centre AFC) மூலம் விண்ணப்பிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது.


அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் விண்ணப்பிக்க ஒரு மாணவருக்கு விண்ணப்பக் கட்டணம் ரூ.48/ம், பதிவுக் கட்டணம் ரூ.2/ மட்டுமே ஆகும். இதில் SC/ST பிரிவினருக்கு விண்ணப்பக் கட்டணம் ஏதுமில்லை. பதிவுக் கட்டணம் ரூ.2/ மட்டும் செலுத்தினால் போதும். விண்ணப்பக் கட்டணம் மற்றும் பதிவுக் கட்டணத்தை Debit Card/ Credit Card/ Net Banking/ UPI மூலம் இணையதளம் வாயிலாகச் செலுத்தலாம்.

மாணவர்கள் சேர்க்கை தொடர்பான சந்தேகங்களுக்கு விளக்கம் பெற கல்லூரிக் கல்வி இயக்ககத்தில் செயல்படும் உதவி மையத்தைத் திங்கள் முதல் வெள்ளிக்கிழமைகளில் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை அணுகலாம்.

மேலும் தொடர்புக்கு 044-24343106 / 24342911 என்ற தொலைபேசி எண்களிலும் தொடர்பு கொள்ளலாம் என சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ரஷ்மி சித்தார்த் ஜகடே தெரிவித்துள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### டாக்டர் இரா. கோவிந்தசாமி
### மே 21 (1995)



**கழகம் தொடங்கப்பட்ட நாளில் இருந்தே உறுப்பினராகி, சாலவாக்கம் கிளைச் செயலாளராகி பணியாற்றி வந்ததுடன், அருகில் உள்ள அனைத்து குக்கிராமங்களிலும் கழகக் கொள்ளைகளை விளக்கி நாடகங்கள் மூலமாக பிரச்சாரம் செய்து வந்தவர். தலைமைக் கழக பேச்சாளராக திகழ்ந்தவர்.**

**அறிஞர் அண்ணாவின் தலைமையில் சுயமரியாதை திருமணம் செய்து கொண்ட இவர், உத்திரமேரூரில் 1965ல் தனது தலைமையில் மொழிப் போராட்டத்தை நடத்தி, ஆறு மாத சிறைத்தண்டனை பெற்றவர்.**

**மும்முனைப் போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்புப் போராட்டம் என கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றதோடு, மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு, காவல் துறையினரால் கடுமையாக தாக்கப்பட்டவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ஆனந்த சேகரன் பங்கேற்பு!

## தூத்துக்குடி மாநகரக் கழகப் பிரதிநிதிகள் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர்–அமைச்சர் பி.கீதாஜீவன் அறிவிப்பு!

தூத்துக்குடி, மே 21-

தூத்துக்குடி மாநகர பிரதிநிதிகள் கூட்டம் 23ஆம் தேதி அன்று நடைபெறுகிறது என்று மாவட்டக் கழகச் செயலாளர்-அமைச்சர் பி.கீதாஜீவன் மற்றும் மாநகரச் செயலாளர் எஸ். ஆர். ஆனந்த சேகரன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.



இது குறித்து தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர்-அமைச்சர் பி.கீதாஜீவன் மற்றும் மாநகரச் செயலாளர் எஸ்.ஆர்.ஆனந்த சேகரன் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தூத்துக்குடி மாநகர தி.மு.க பிரதிநிதிகள் கூட்டம் 23.05.2025-வெள்ளிக்கிழமை அன்று, மாலை 6 மணி, இடம்: கலைஞர் அரங்கம், தூத்துக்குடியில் மாநகர அவைத்தலைவர். கோ. ஏசுதாஸ் தலைமையில் நடைபெறுகின்றது.

கூட்டத்தில் தூத்துக்குடி மாநகரத்திற்கு உட்பட்ட மாவட்ட கழக நிர்வாகிகள் தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, பகுதி, வட்டக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், கழக சார்பு அணிகளின் மாநில, மாவட்ட, மாநகர, பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவரும் இதனையே அழைப்பாக ஏற்று தவறாது கலந்து கொள்ள அழைக்கிறேன்.

பொருள் :

1.முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடுவது குறித்து

2.தூத்துக்குடி மாநகரத்திற்கு உட்பட்ட 6 பகுதிகளிலும் BLC கூட்டம் நடத்துவது குறித்து.

3.26.05.2025 அன்று தூத்துக்குடி மாவட்ட தி.மு.க முன்னாள் செயலாளர் என்.பெரியசாமி அவர்களின் 8 -ம் ஆண்டு நினைவு தினம் - குறித்து.

4.கழக வளர்ச்சி பணிகள் - குறித்து.

5.இவ்வாறு அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.



கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன் கழகத்தின் மூத்த முன்னோடி, தமிழ்நாடு முன்னாள் வேளாண்மை துறை அமைச்சர் ஐயா ஏ.ஜி. என்கின்ற ஏ.கோவிந்தசாமி அவர்களின் 56வது நினைவு நாளை முன்னிட்டு, 18.05.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று மணலூர்பேட்டை ஆஞ்சநேயர் கோவில் அருகே அமைக்கப்பட்ட அவரது திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி நினைவு அஞ்சலி செலுத்தினார். இந்த நிகழ்வின் போது மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளைக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள், சார்பு அணி நிர்வாகிகள், கழகத் தோழர்கள் என அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

ஒருங்கிணைந்த சென்னை மாவட்டக் கழகத்தின்
முன்னாள் செயலாளர்

## ஆர். டி. சீத்தாபதி அவர்களின்
### 6 ஆம் ஆண்டு நினைவேந்தல்
21.05.2025



**கழகத்தின் கொள்கைக் குன்றாக,**
**தியாகத்தின் மறு உருவமாக,**
**உழைப்பில் ஓய்வறியாத் தேனீயாக**
**கழகப் பணியாற்றியவர்**
**ஆர். டி. சீத்தாபதி அவர்கள்**

என்றும் உங்கள் வழியில்

**R.D.S.R. பிரபாகரன் R.D.S.R. அன்பழகன் D. மாறன்**